


**16. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. மத்திய அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் 80 சதவிகித தீவிரவாத வன்முறைகள் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் 8 லட்சத்து 27 ஆயிரம் மாணாக்கர் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வை எழுதவுள்ளதாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

4. திருச்சி லால்குடி நகராட்சியில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய பேருந்து நிலையத்தை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

5. புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் கரண் சிங் – போலந்தின் டேனியலை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணியில் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு இன்று நடைபெறும் நிலையில், சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், அறிவியல் தொழில் நுட்பத்தில் நாம் வேகமாக முன்னேறி வருவதை இந்நிகழ்வு பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

இச்செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு நம்நாட்டு இளையோரின் திறன்களுக்கு சான்றாகும் என்றும் கூறினார்.

உலகம் முழுவதிலுமிருந்து இம்மாநாட்டிற்கு வருகை தரும் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்களை அன்புடன் வரவேற்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக இந்த மாநாட்டில் உரையாற்றிய மத்திய அரசின் முதன்மை பொருளாதார ஆலோசகர் திரு. ஆனந்த நாகேஸ்வரன், கல்வி சீர்த்திருத்தங்கள் மூலம் செயற்கை நுண்ணறிவு சார்ந்த வேலை வாய்ப்புகளை இந்தியா முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று எடுத்துரைத்தார்.

தனியார் துறைகள், கல்வி நிறுவனங்கள், கொள்கை உருவாக்குபவர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து இதில் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பிரேசில் அதிபர் லூயிஸ் டிசில்வா, ஸ்பெயின் அதிபர் பெட்ரோ சான்சஸ், ஸ்விட்சர்லாந்து அதிபர் Guy parmelin உள்ளிட்ட 20 நாடுகளின் உயர்மட்ட தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

குடிமக்கள் ! கோள் ! முன்னேற்றம் ! என்பதை கருப்பொருளாக கொண்டு இம்மாநாடு நடைபெறுகிறது.

மனித முதலீடு ! சமூக ஆளுமை உள்ளடக்கம் ! பாதுகாப்பான நம்பகத் தன்மையுடைய செயற்கை நுண்ணறிவு ! அறிவியல் மீட்சி ! புதுமையான கண்டுபிடிப்புகள் ! வலிமை ! செயற்கை வள ஆதாரங்களில் பயன்பாடு ! பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கம் சார்ந்த விவாதங்கள் இதில் இடம்பெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது அரசியல் சாசன சட்டப்பிரிவு நீக்கப்பட்ட பின்னர், காஷ்மீர் வடகிழக்கு மற்றும் மாவோயிஸ்ட் பகுதிகளில் 80 சதவிகித வன்முறைகள் குறைந்ததாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

டெல்லி போலீசாரின் 79-வது நிறுவன நாள் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர், 11 மாநிலங்களில் பரவியிருந்த

மாவோயிஸ்ட் பயங்கரவாதம் உள்நாட்டு பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்ததாக குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தையும், போதைப் பொருள் கடத்தலையும் எதிர்கொள்ளும் வகையில் 345 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த நவீன தொழில்நுட்ப தலைமையகம் காவல் துறையினருக்காக தலைநகரில் ஏற்படுத்தப்படும் என்றார்.

கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டது உள்ளிட்ட பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் பாதுகாப்பான நகரகங்கள் திட்டத்தின் முதல் கட்ட பணிகளை திரு. அமித்ஷா தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளின் சார்பில் புதிய திட்டங்களை சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

உயர்கல்வித்துறை சார்பில் திருச்சி துவாக்குடி, மன்னார்குடி, செட்டிக்கரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தொழில்நுட்ப கட்டடங்கள், திறன் வகுப்பறைகள், ஆய்வக கட்டடங்களையும் முதலமைச்சர் திறந்து வைத்துள்ளார்.

தொடர்ந்து வேளாண் நலத்துறை சார்பில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 2 கோடிரூபாய் செலவில்

அமைக்கப்பட்டுள்ள உழவர் அங்காடிகளையும் அவர் தொடங்கி வைத்தார்.

மேலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பிலான 14 கோடி ரூபாய் செலவில் 20 மாவட்டங்களில் 105 விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையங்களையும் காணொலி மூலம் அவர் திறந்து வைத்துள்ளார்.

பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதிகளை மதுரை, தர்மபுரி, கடலூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் முதலமைச்சர் துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெயரஞ்சன்

2025 -26 ம் ஆண்டிற்கான தமிழக பொருளாதார ஆய்வறிக்கை முதலமைச்சரிடம் இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை சமர்ப்பித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில திட்டக்குழு துணைத்தலைவர் திரு.ஜெயரஞ்சன் தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளதாக கூறினார்.

மாநிலத்தின் தொழில்துறை வலுவான கட்டமைப்புடன் உள்ளதாக எடுத்துரைத்தார்.

மின்னணு சாதன பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சிக் கண்டுள்ளதாகவும், உயர்கல்வி மாணாக்கர் சேர்க்கையில் தமிழகம் முன்னணியில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தமிழக சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவை நாளை கூடுகிறது.

தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான இடைக்கால பட்ஜெட்டை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு நாளை தாக்கல் செய்கிறார்.

இதில் பல்வேறு புதியஅறிவிப்புகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக்குழு நாளை முடிவெடுக்கும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் கடலோரங்களில் பாதுகாப்பினை வலுப்படுத்தும் வகையில் கிழக்கு கடற்கரை சாலை வழியாக வந்தே மாதரம் கோஷங்களுடன் சைக்கிள் பேரணியை மேற்கொண்டுள்ளனர்.

வந்தே மாதரம் 150-வது ஆண்டு விழாவை முன்னிட்டு கொல்கத்தாவிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லும் இப்படையினர் நாகை மாவட்டத்தை வந்தடைந்த போது நாகை செல்லூர் அரசு கலைக்கல்லூரி சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் அடுத்தமாதம்
2-ம் தேதி தொடங்கவுள்ள நிலையில், இத்தேர்வினை மாநிலம் முழுவதும் 8 லட்சத்து 27 ஆயிரம் மாணாக்கர் எழுதவுள்ளதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதேபோல் அடுத்தமாதம் 11-ம் தேதி தொடங்கும், 10-ம் வகுப்பு பொதுத்தேர்வை 9 லட்சம் மாணாக்கர் எழுதவுள்ளதாக கூறினார்.

பொதுத்தேர்வு பணியில் ஒவ்வொரு நாளிலும் 49 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சித் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டம் லால்குடியில் 32 கோடிரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், மக்களுக்கான பல்வேறு முன்னோடி திட்டங்களை அரசு முனைப்புடன் நிறைவேற்றி வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மீனவர்கள் கைது

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல்மேடு, காசாகுடி மேடு பகுதிகளை சேர்ந்த 25 மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்தனர்.

அவர்களின் 2 விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மீனவர்களையும் அவர்களது படகுகளையும் மீட்டுத்தர வேண்டுமென்று மீனவர்கள் மத்திய மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

வேலை நிறுத்த போராட்டம்

லாரிகளுக்கான வாகன தகுதிச் சான்றிதழ் FC கட்டணங்களை மத்திய அரசு உயர்த்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட லாரி உரிமையாளர்கள் இன்றுமுதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட லாரிகள் இன்று இயங்கவில்லை.

அதேபோல் தஞ்சை, நாகை, மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும் லாரிகள் இன்று இயக்கப்படவில்லை.

லாரி உரிமையாளர்களின் இந்த போராட்டத்தால் நுகர்பொருள் வாணிபக்கழக கொள்முதல் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருச்சி மாநகராட்சி அலுவலகத்தில் நுழைவாயில் மற்றும் பல்வேறு பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. K.N. நேரு இன்று தொடங்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் தாட்கோ சார்பில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து திறன் பயிற்சிகள் வழங்கப்பட இருப்பதால் ஆதி திராவிட இளைஞர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தீ விபத்து

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் பேருந்து நிலையம் அருகே உள்ள கட்டடத்தின் முதலாவது மாடியில் செயல்பட்டு வரும் இந்தியன் வங்கியில் தீ விபத்து இன்று நேரிட்டதை அடுத்து தீயணைப்பு படைவீரர்கள் ஒருமணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

விபத்திற்கான காரணம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உதகை வாய்ஸ்

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 128-வது மலர் கண்காட்சிக்காக 10 லட்சம் மலர் நாற்றுக்களும், 50 ஆயிரம் மலர் தொட்டிகளும் தயார்படுத்தும் பணி தொடங்கியுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. லக்ஷ்மி பவ்யா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் கரண் சிங் – போலந்தின் டேனியலை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖